## பத்திரிக்கை செய்தி

## பயிர் காப்பீடு செய்திட மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்

கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் ஆர்.கே.சந்திரசேகரன் தலைமையில் விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்களின் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சிறப்புரையாற்றினார்கள்.

விழுப்புரம் மாவட்டம் மழையை நம்பியே உள்ள மாவட்டம் என்றும், ஒவ்வொரு ஆண்டும் பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் பயிர் பொய்த்து போகும் போது விவசாயிகள் படும் இன்னல்களுக்கு பயிர்காப்பீடு மிக அவசியம் என்று தெரிவித்தார். இவ்வாண்டு இதுவரை குறைந்த அளவே மழை பெய்துள்ளது என்றும், இது மிக மிக குறைவு என்றும், இந்நிலையில் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்திட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்கு முன்னர் இருந்த திட்டம் அவ்வளவு பயன் உள்ளதாக இல்லாததால் விவசாயிகள் நிவாரணம் பெற இயலவில்லை. தற்போது உள்ள திட்டத்தில் விவசாயிகள் நிச்சயம் பயன்பெறுவார்கள் என்று தெரிவித்து பயிர் காப்பீடு செய்வதில் எதிர்பார்த்த அளவில் விவசாயிகள் சேரவில்லை என தெரிவித்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள், விவசாயிகள் கடன் பெறும்போதும், கடன் பெறாத ஒவ்வொரு